**செ.வெ.எண்: 25/2021** **நாள்: 10.08.2021**

# அறிவிப்பு

திருப்பூர் மாவட்டத்தில் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் மூலம், திருப்பூர் மாநகராட்சி, அவினாசி, உடுமலைப்பேட்டை மற்றும் பல்லடம் நகராட்சி பகுதிகளில் கட்டப்பட்டுள்ள அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு ஒதுக்கீடு தொடர்பாக மாற்றுத் திறனாளிகள் மற்றும் ஆதரவற்ற விதவைகள் ஆகியோரில் தகுதியுள்ள பயனாளிகள் கண்டறியும் பொருட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் 19.08.2021 மற்றும் 26.08.2021 ஆகிய நாட்களில் சிறப்பு முகாம் நடைபெற உள்ளது. விருப்பமுள்ள மாற்றுத் திறனாளிகள் மற்றும் ஆதரவற்ற விதவைகள் உரிய சான்றிதழ்களுடன் சிறப்பு முகாமில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.வினீத் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்,